VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

SAS SCHOOL OF ARTS AND SCIENCE

# கலை மற்றும் அறிவியல் புலம்

**விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் - சென்னை வளாகம்**

## தமிழ்த்துறை

## திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம்

## *பறப்பு-18*

## <u>மாணவர்களும் ஊடகங்களும் – கருத்தரங்க அறிக்கை</u>

| | |
|---|---|
| *நிகழ்வின் தலைப்பு* | *:கருத்தரங்கம்* |
| *நாள்* | *: 13.03.2024* |
| *இடம்* | *: GIEC* |
| *பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை* | *: 59* |


SAS

கலை மற்றும் அறிவியல் புலம்

தமிழ்த்துறை

சுற்றறிக்கை




*நடப்பு கல்வியாண்டில் (2023-2024) திருக்குறள் செம்மல் ந . மணிமொழியனார் முத்தமிழாயம் மற்றும் தமிழ்த்துறை இணைந்து 13.3.2024 அன்று* ***மாணவர்களும் ஊடகங்களும்*** *என்கிற தலைப்பிலான கருத்தரங்கை ஒருங்கிணைத்தது. அறுபடை வீடு வளாகத்தில் உள்ள GIEC அரங்கில் வேந்தர் திரு ஏ. எஸ். கணேசன் மற்றும் இயக்குநர் அனுராதா கணேசன் ஆகியோருடைய ஆசியுடன் காலை 10 மணிக்கு இந்நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.*


தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு அ. முத்துக்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினர்களையும் கல்லூரி பேராசிரியர்களையும், மாணவர்களையும் வரவேற்று சிறப்பான வரவேற்புரையை தந்தார். அதனைத் தொடர்ந்து இக்கருத்தரங்கின் நோக்க உரையை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள் பேசிய போது, திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் முத்தமிழாயம் அமைப்பு உருவான வரலாறு, அவ்வமைப்பின் வழியாக இதுவரையில் நடந்துள்ள நிகழ்வுகள் குறித்து பேசினார். மேலும், மாணவர்கள் சமகாலத்தில் உள்ள ஊடகங்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளதால் இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளோம், எனவே மாணவர்கள் இதனை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவரது உரை அமைந்தது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக வந்திருந்த, திரு ச. அழகு சுப்பையா (முதன்மை செய்தியாளர், விகடன் குழுமம்) அவர்கள் "மாணவர்களும் அச்சு ஊடகங்களும்" என்கிற தலைப்பில் உரையாற்றினார். காட்சி ஊடகங்கள் பல்கிப் பெறுகியுள்ள இன்றைய காலத்திலும் அச்சு ஊடகங்களின் தேவையும் இருப்பும் அவசியமாக உள்ளன எனவும், காட்சி ஊடகங்களின் செய்திகள் நிரந்தரமில்லை, மாறாக அச்சு ஊடகங்கள் நிரந்தரமானவையாகவும், வரலாற்று ஆவணமாகவும் இருக்கும் வலிமை படைத்தவை என சான்றுகளுடன் பேசினார்.


அதனைத் தொடர்ந்து மற்றொரு சிறப்பு அழைப்பாளராக வந்திருந்த, திரு க.சந்தான பாரதி (செய்தி ஆசிரியர், வேந்தர் தொலைக்காட்சி) அவர்கள் சிறப்புரையாற்றினார். மக்களின் அன்றாட சிக்கல்களையும் பரபரப்பான செய்திகளையும் உடனுக்குடன் தெரிந்து கொள்வதில் காட்சி ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன, மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும் என பேசினார். மேலும் அவர் ஆர்வமுள்ள மாணவர்கள் வந்தால் எங்கள் நிறுவனமே அதற்கான வழிமுறைகளையும் வேலை வாய்ப்பினையும் செய்து தரும் எனவும் உறுதியளித்தார். இந்த உறுதி மொழி மாணவர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.


அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களுடனான மாணவர்களின் கலந்துரையாடல் நிகழ்ந்தது. ஊடகத்துறையில் மாணவர்கள் எவ்வாறு நுழைவது, அதற்கான வழிமுறைகள், பயிற்சிகள், ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளையும் ஐயங்களையும் எழுப்பினார்கள். அவற்றிற்கு சிறப்பு விருந்தினர்கள் இருவரும் தெளிவான எளிமையான பதில்களைத் தந்தார்கள். அந்த பதில்கள் மாணவர்களுக்கு மிகுந்த நிறைவைத் தந்தன. கிராமப்புற பகுதிகளிலிலிருந்து வரும் மாணவர்கள் ஊடகங்கள் குறித்து கேள்வியை எழுப்பிய விதம் மிகவும் மகிழ்வாக இருப்பதாக சிறப்புரையாளர்கள் தெரிவித்தார்கள்.

கலந்துரையாடல் நிகழ்வு முடிந்ததும், தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சா. திருவாசகம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். இறுதியாக நாட்டுப்பண் ஒலிக்க நிகழ்வு நிறைவுற்றது.










VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
Deemed to be University under section 3 of the UGC Act 1956
SAS SCHOOL OF ARTS AND SCIENCE
திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம்
தமிழ்த்துறை : இலக்கியப் பதாகை பறப்பு 18
மாணவர்களும் ஊடகங்களும்
(Students and Media)
சிறப்புரை
திரு. ச. அழகு சுப்பையா
முதன்மை நிருபர்,
விகடன் குழுமம்
திரு. க. சந்தான பாரதி
செய்தி ஆசிரியர்,
வேந்தர் தொலைக்காட்சி
நாள் : 13.03.2024
இடம் : GIEC அரங்கு
நேரம் : காலை 9.30 மணி

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

SAS
SCHOOL OF ARTS AND SCIENCE














***பின்னூட்டம்***

***13.03.2024 தேதியன்று தமிழ்த்துறை - திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் சார்பில் ஒருங்கிணைத்த பறப்பு-18 (மாணவர்களும் ஊடகங்களும்) என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்க நிகழ்வானது எங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது.***

